## ஊவா மாகாண சபை – 2020 ஆண்டு

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஊவா மாகாண சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைச் சட்டத்தின் பிரிவு 23(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைச் சட்டத்தின் பிரிவு 23(2) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) உப பிரிவின் பிரகாரம் பொழிப்பு அறிக்கை 2021 ஒக்தோபர் 25 திகதி வழங்கப்பட்டதுடன் தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2021 ஒக்தோபர் 22 ஆந் திகதி வழங்கப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரை மற்றும் தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கும், அறிக்கையின் பிரதி 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபை சட்டத்தின் பிரிவு 23(2) பிரகாரம் மாகாண சபைக்கு சமர்ப்பிப்பதற்காக ஆளுனருக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கல் தவிர ஊவா மாகாண சபையின் நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊவா மாகாண சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களை தனதாக்கும் போது அல்லது கைதவிர்க்கும் போது உரிய ஆண்டிற்கான பெறுமானத்தேய்வு கணித்தல் தொடர்பாக கடைபிடிக்கப்படும் கணக்கீட்டுக் கொள்கை வெளிப்படுத்தியிருக்கவில்லை. | ஆதனங்கள் பொறித் தொகுதிகள் உபரகணங்களின் வருட இறுதியில் காணப்படும் மீதியை அடிப்படையாகக் கொண்டு பெறுமானத்தேய்வு கணித்தல் மேற்கொள்ளப்பட்டது. பல்வேறு நிறுவனங்கள் தொடர்பாக மாகாண நிதியத்தின் சொத்துக்கள் பிரதிநிதிப்படுத்துவதுடன் அவை பல்வேறு நாட்களில் பெற்றுக்கொள்ளப்பட்டவை ஆகும். அதன் படி காலப் பகுதியின் அடிப்படையில் பெறுமானத் தேய்வு கணித்தலுக்காக பாரிய காலம் ஒன்று எடுப்பதுடன் செய்முறைசார் வசதியீனங்களை ஏற்படுத்துகின்றது. | கடைபிடிக்கப்படும் கணக்கீட்டுக் கொள்கை சரியாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டு அந்த கொள்கையின் படி பெறுமானத்தேய்வு கணிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 143,656,105 தொகைக்கான பெற வேண்டிய வரி மற்றும் வரியல்லாத வருமானங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | வருமானங்களை கணக்கீடு செய்தல் பண அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன என கணக்கீட்டுக் கொள்கைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அரச கணக்குப் பதிவுகளின் போது இந்த வரி வருமானம் பெறுவதற்கு முன்னர் பில் போடப்படல் மேற்கொள்ளப்படாமையால் அட்டுறு அடிப்படையில் கணக்குப் பதிவு ஒன்று மேற்கொள்ள முடியாது. | ஒன்றித்த நிதிக்கூற்றுக்களில் கணக்கு விடயங்கள் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்ய வேண்டும். |
| (இ) | 1980 இன் 08 ஆம் இலக்க ஊவா மாகாண நிதி நியதிச் சட்டத்தின் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய முத்திரைக் கட்டணத்தின் பெறுமதியை இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | முத்திரைக் கட்டணம் மீண்டும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு செலுத்துவதற்கான கடப்பாடு ஒன்று காணப்பட்ட போதிலும், இந்தப் பொறுப்புக்களை தீர்ப்பதற்காக நியதிச் சட்டத்தின் பிரகாரம் சில நிபந்தனைகள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தமையால், இது சட்டரீதியான நிகழத்தக்க பொறுப்பொன்றின் தன்மையில் காணப்படுகின்றது. | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய முத்திரைக் கட்டணப் பெறுமதி தொடர்பாக கடைபிடிக்கப்பட்டுவரும் நடவடிக்கை கணக்குகளில் கொள்கை ஒன்றாக வெளிப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அதன்படி முத்திரைக் கட்டணம் குறிப்பிட்ட வருமானத் தலைப்பின் கீழ் மாகாண நிதியத்திற்கு செலவு வைக்கப்படுவதுடன், இந்த நிகழத்தக்க பொறுப்புக்களை தீர்ப்பதற்கு நேரிட்டால், 1993 இன் 5 ஆம் இலக்க முத்திரைக் கட்டணம் திருப்புதல் நியதிச் சட்டத்தின் பிரகாரம் உள்ளூராட்சி, சபைகளுக்கு மீண்டும் செலுத்துவதற்காக வருடாந்த நிதி நியதிச் சட்டத்தில் சட்டரீதியான நிகழத்தக்க பொறுப்பொன்றிற்காக செலவு விடய இலக்கம் 1504 இன் கீழ் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்போது இது தொடர்பாக யாப்பின் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் திருத்தங்கள் தொடர்பாக மீளாய்வொன்று மேற்கொள்ளப்படுவதுடன் அந்த ஏற்பாடுகள் திருத்தத்தின் பின்னர் அந்த முறைப்படி செயற்படுவதற்கு இயலுமாக இருக்கும். அது வரை தற்போது காணப்படும் ஏற்பாடுகளின் படி செயற்படுதல் அரசின் பொறுப்பு ஒன்றாக காணப்படுவதுடன் அதன் படி கணக்குகள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | |
| (ஈ) | ஊவா மாகாண சபைக்கு எதிராக பல்வேறு ஆட்கள் மற்றும் நிறுவனங்களினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு அலுவல்களை இனங்கண்டு அதனோடு தொடர்பான தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தி இருக்கவில்லை. | மாகாண சபை நிதியத்தில் இருந்து உறுதியாக செலுத்தப்பட வேண்டிய நிகழத்தக்க பொறுப்புக்கள் இனங்காணல் மேற்கொள்ளப்படாமையால் மாகாண சபை நிதியத்தில் வெளிப்படுத்தப்படவில்லை. எதிர்காலத்தில் அவ்வாறான உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்திய பின்னர் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பொறுப்புக்கள் உறுதிப்படுத்தாத போதிலும் நிகழத்தக்க பொறுப்புக்கள் கணக்குகளில் குறிப்பு ஒன்றாக நிதிக்கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீண்டுவரும் செலவுகளில் தேறிய ஏற்பாடுகளின் கூட்டுத்தொகை நிதிச் செயலாற்றல் கூற்றின் படி ரூபா 23,735,112,000 தொகை எனினும், மாகாண திறைசேரி ஏடுகளின் படி ரூபா 25,665,056,250 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 1,929,944,250 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | குறிப்பு 06 இல் சரியாக காட்டப்பட்டுள்ள போதிலும் தவறுதலாக நிதிச் செயலாற்றல் கூற்றில் சரி செய்வதற்கு முடியாமல் போனது. அதனால் வித்தியாசம் ஏற்பட்டிருந்தது. | நிதிச் செயலாற்றல் கூற்றில் காட்டப்பட்டுள்ள மீண்டுவரும் செலவுகளின் தேறிய ஏற்பாடுகள், மாகாண திறைசேரி ஏடுகளுடன் இணங்க வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மாகாண சபையின் 03 நிறுவனங்களினால் தயாரிக்கப்பட்டிருந்த வாணிப முற்பணக் கணக்குகளில் மாகாண திறைசேரிக்கு செலுத்த வேண்டிய முற்பண மீதிகள் காட்டப்பட்டிருக்காததுடன் ஒன்றித்த நிதிக் கூற்றுக்களின் படி தீர்க்கப்பட வேண்டிய முற்பண மீதி ரூபா 4,777,252 தொகையாக இருந்தது. | வாணிப முற்பண கணக்குகள் தொடர்பாக தீர்க்கப்படாத கட்டுநிதி மீதி காணப்படுவதுடன் அவை குறிப்பிட்ட வாணிப முற்பண கணக்குகளில் இருந்து அறவீடு செய்வதற்கு மற்றும் அதனோடு தொடர்புடைய குறிப்புகள் காணப்படாவிடின் அதற்குத் தேவையான சீராக்கல்கள் மேற்கொண்டு தேவையான அறவீடுகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஒன்றித்த நிதிக் கூற்றுக்களில் அடங்கியுள்ள தகவல்கள் குறிப்பிட்ட நிறுவனங்களின் தகவல்களுடன் இணங்க வேண்டும். |
| (எ) | ஊவா மாகாண சபையின் 04 அலுவலகங்களின் ஒதுக்கீட்டுக் கணக்குகளில் நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் - ஏசீஏ 6 இல் உள்ளடங்கிய மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த சொத்துக்களின் மீதி அத் திகதியில் உள்ளவாறு மாகாண திறைசேரி ஏடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள நேரொத்த மீதிகளுடன் இணக்கஞ் செய்யும் போது ரூபா 14,129,136 இற்கான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | ஒன்றித்த நிதிக் கூற்றுக்களில் அடங்கியுள்ள தகவல்கள் திறைசேரி ஏடுகளில் காட்டப்பட்டுள்ள தகவல்களுடன் இணங்க வேண்டும். |

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் செய்முறை தொடர்பான பொறுப்பு திறைசேரி உட்பட அவ்வவ் நிறுவனங்களின் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் ஊவா மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளரின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு என்னால் செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- வேண்டுமென்றே தவிர்ப்புச் செய்தல் அல்லது கட்டுப்பாடுகளை தவிர்ப்பு செய்தல் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாகாண சபையின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளில் மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகள் நியாயமான தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக முகாமைத்துவத்திற்கு அறியப்படுத்தப்பட்டது.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.5.1 தலைப்பு 702- பகிரங்க சேவை ஆணைக்குழு

**சுற்றாடல்சார் மற்றும் சமூக பொறுப்புக்களை நிறைவேற்றல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஊவா மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழு, பிரதி பிரதான செயலாளர் (பொறியியல் சேவை) அலுவலகம் மற்றும் கட்டிடப் பணிப்பாளர் அலுவலகம் அமைந்துள்ள வளாகத்தில் பரவிக் காணப்படும் அதிகரித்த நுளம்புத் தொல்லையின் காரணமாக டெங்கு தொற்றுநோய் நிலைமையொன்று பரவுவதற்கு காரணமாய் இருப்பதுடன் பதவியணியினர் உட்பட சுற்றுப் புறத்தில் வாழக்கூடிய பொது மக்களுக்கு ஏற்படக் கூடிய தாக்கம் தொடர்பாக கவனம் செலுத்தி நுளம்புத் தொல்லையில் இருந்து தவிர்த்துக் கொள்வதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | மக்களின் சுகாதாரத்துக்கு ஏற்படக் கூடிய தாக்கம் தொடர்பாக கவனம் செலுத்தி நிறுவன ரீதியாக அலுவல்கள் பேணப்பட வேண்டும். |

### 1.5.2 தலைப்பு – 704 , முதலமைச்சு மற்றும் நிதி மற்றும் திட்டமிடல், சட்டமும் ஒழுங்கும், கல்வி, உள்ளூராட்சி, காணி, மின்சக்தி மற்றும் வலுச்சக்தி, நிர்மாண வேலை மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு

(அ) வருமான முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஊவா மாகாண நூலக சேவை சபைக்குச் சொந்தமான சிறு கேட்போர் கூடம் ஒரு மாதத்திற்கு ரூபா 30,000 இற்கான வாடகை அடிப்படையில் ஊவா மாகாண சபையின் கிராம அபிவிருத்தித் திணைக்கள அலுவலகத்தினை நடாத்துவதற்காக அதற்கான உடன்படிக்கையின் பிரகாரம் 2015 பெப்ரவரி மாதம் முதல் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரையான காலப் பகுதிக்காக அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட நிலுவை வாடகை ரூபா 2,130,000 தொகை அறவீடு செய்திருக்கவில்லை. | இந்த இரண்டு நிறுவனங்களும் ஊவா மாகாண கல்வி அமைச்சினால் நிர்வகிக்கப்படுவதுடன் இரண்டு நிறுவனங்களினதும் செலவினங்கள் அதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. அதனால் கிராம அபிவிருத்தித் திணைக்களத்திற்கான கட்டிட வாடகை செலுத்துதல் அமைச்சுக்கு மேலதிக செலவினம் ஏற்படுவதன் காரணமாக கிராம அபிவிருத்தித் திணைக்களத்திடம் கட்டிட வாடகை அறவீடு செய்யாமல் இருப்பதற்கு 2020 செப்தெம்பர் 18 திகதி நூலக சேவை சபை பணிப்பாளர் சபையினால் கொள்கை ரீதியான தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. | உடன்படிக்கையின் பிரகாரம் நிலுவை வாடகை அறவீடு செய்யப்பட வேண்டும். |

(ஆ) கல்வி தொடர்பான பதவியணி நிருவாகம்

| | | |
| --- | --- | --- |
| 2006 ஏப்ரல் 25 ஆந் திகதிய 6/2006 மற்றும் 2006 நவம்பர் 10 ஆந் திகதிய இலக்கம் 6/2006(ii) கொண்ட பொது நிருவாகச் சுற்றறிக்கையின் படி 2006 ஜனவரி 01 திகதி முதல் அரச சேவைக்கு புதிதாக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளும் போது குறிப்பிட்ட உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்பட்ட பதவிக்குரிய சம்பள அளவில் ஆரம்ப மட்டத்தில் நிறுவப்பட வேண்டும். எனினும் 2006 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரை ஊவா மாகாண | இந்த மிகைக் கொடுப்பனவு குறிப்பிட்ட உத்தியோகத்தர் குறிப்பிட்ட பதவிக்கு மற்றும் தரத்திற்கு உரிய சம்பள நிலையை அடையும் வரை அடுத்த சம்பள அதிகரிப்புக்களை வழங்காமல் சம்பள அதிகரிப்புக்களில் இருந்து பதிலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமையால் சிக்கல் தீர்க்கப்பட்டுள்ளது. | மிகையாக செலுத்தியுள்ள தொகையை அறவீடு செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| சபையினால் ஆட்சேர்க்கப்பட்ட பாடசாலை நூலக ஊழியர், பாடசாலை ஆய்வுகூட ஊழியர் மற்றும் பாடசாலை காவலாளர் பதவிகள் 778 இற்காக III தரத்தின் ஆரம்ப சம்பள மட்டத்தில் நிறுவுவதற்குப் பதிலாக II தரத்திற்கு ஆட்சேர்க்கப்பட்டு அந்தத் தரத்தின் ஆரம்ப சம்பள மட்டத்தில் நிறுவப்பட்டு 2006 நவம்பர் மாதம் முதல் மீளாய்வாண்டு செப்தெம்பர் மாதம் வரை அடிப்படைச் சம்பளம் என ரூபா 132,825,714 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக தேசிய சம்பள ஆணைக்குழுவின் செயலாளரின் 2020 ஜூன் 12 திகதிய இலக்கம் NSCC/12/78/2/1/SR கடிதத்தின் 03(ii) பந்தியின் படி குறிப்பிட்ட தரத்தில் மற்றும் சம்பள நிலையில் நிறுவி குறிப்பிட்ட சம்பள நிலையை அடையும் வரை அடுத்த சம்பள உயர்வு வழங்கப்படாமல், இந்த மிகையாக செலுத்தியிருந்த ரூபா 132,825,714 இற்கான தொகையொன்று சம்பள அதிகரிப்புக்களில் இருந்து பதிலீடு செய்தல் பொருத்தமானது என காட்டப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு செய்திருக்கவில்லை. | | |
| (இ) ஊவா மாகாண சபை அச்சக முற்பணக் கணக்கு அலுவல்<br>------------------------------------------------------------------- | | |
| ஊவா மாகாண சபையின் நிதி விதி 503.4 இன் படி முற்பணக் கணக்கு அலுவல்கள் தொடர்பாக உரிய வரையறைகளுக்குள் செயற்பட வேண்டும். எனினும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் ஊவா மாகாண சபையின் அச்சக முற்பணக் கணக்கிற்கு உரிய செலவுகளின் உச்ச எல்லை ரூபா 25,000,000 தொகை எனினும், உள்ளவாறான செலவு ரூபா 26,039,800 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 1,039,800 தொகையினால் செலவுகளின் உச்ச எல்லை மிகைத்திருந்தது. | கொவிட் 19 காரணமாக குவிந்திருந்த அச்சு வேலைகள் மிக விரைவாக நிறைவேற்றி ஒப்படைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட அச்சு அலுவல்களின் போது செலவு உச்ச எல்லையை மிகைத்திருந்தது. | தேவையான சந்தர்ப்பங்களில் எல்லைகளை திருத்திக் கொள்ளல். |

(ஈ) மாகாண சபையின் ஏனைய பதவியணி நிருவாகம்

-------------------------------------------------------------------------------------

| | | |
|---|---|---|
| 2000 இன் 05 ஆம் இலக்கம் கொண்ட ஊவா மாகாண நூலகச் சேவை சபை நியதிச் சட்டத்தின் 6 மற்றும் 7 பிரிவுகளின் பிரகாரம் நூலக சேவைச் சபைக்காக தேவையான உத்தியோகத்தர் உட்பட பதவியணி அந்தச் சபையினால் ஆட்சேர்க்கப்படாமல் முதலமைச்சு மற்றும் நிதி மற்றும் திட்டமிடல், சட்டமும் அமைதியும் கல்வி, உள்ளூராட்சி, காணி, மின்சக்தி மற்றும் வலுசக்தி, நிர்மாண வேலை மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சில் இருந்து சம்பளம் பெறும் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் 27 பேர் இணைக்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. | தற்போது நியதிச் சட்டத்தின் 6(அ)(II) மற்றும் 7(I) பிரிவுகளின் படி பணிப்பாளர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டுள்ளதுடன் ஏனைய பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்வதற்கு ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்பட்டு அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது. அதே போல் நியதிச் சட்ட சபைகளுக்காக பதவியணியினர் அங்கீகரிக்கப்படுவது முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தினால் என்பதனால் 2019 ஆம் ஆண்டில் அதற்காக விண்ணப்பிக்கப்பட்ட போதிலும் இது வரை போதியளவு பதவியணியினர் அங்கீகரிக்கப்பட்டிருக்காமையால் அந்த நிறுவனத்திற்காக புதிய பதவியணியினர் சேர்க்கும் வரை இவ்வாறு தற்காலிகமாக இணைத்தல் மேற்கொள்ளப்பட்டது. | 2000 இன் 05 ஆம் இலக்க ஊவா மாகாண நூலகச் சேவைச் சபை நியதிச் சட்டத்தின் 6 மற்றும் 7 பிரிவுகளின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.5.3 தலைப்பு – 705 , விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார, சுற்றுலா, போக்குவரத்து, பண்பாடு மற்றும் நெசவுத் தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சு**

(அ) முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | ஊவா மாகாண விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார, சுற்றுலா, போக்குவரத்து, பண்பாடு மற்றும் நெசவுத் தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சினால் 2013 ஆம் ஆண்டின் போது நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த உடவளவ சுற்றுலா ஓய்வு வளாகத்திற்காக 2018 ஆண்டு வரை ரூபா 39,824,944 இற்கான செலவொன்று மேற்கொண்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை ஓய்வு வளாகம் மற்றும் கடை அறைகள் சுற்றுலா பிரயாணிகளுக்காக திறந்திருக்காமையால் செலவிடப்பட்ட தொகைக்கு பொருத்தமாக வருமானத்தை உழைத்துக் கொள்வதற்கு முடியாமல் இருந்தது. | உடவளவ சுற்றுலா நிலையம் நிர்மாணிப்பதற்காக அகற்றப்பட்ட கடை அறைகளுக்கு பதிலாக நிர்மாணிக்கப்பட்ட புதிய 11 கடை அறைகள் 2020 ஜனவரி 23 திகதி குத்தகை அடிப்படையில் கடை உரிமையாளர்களுக்கு வழங்கியிருந்த போதிலும் கொவிட் 19 போரழிவு காரணமாக வியாபாரங்களை நடாத்திச் செல்வதற்கு தடையாக உள்ளது. நிலையத்தின் சிற்றுண்டிச்சாலை மற்றும் கடையறைகளை வாடகைக்கு கொடுப்பதற்காக கேள்வி நடைமுறை கடைபிடிக்கப்பட்டு பெறுபவர்கள் இனங்காணப்பட்ட போதிலும் நாட்டில் காணப்பட்ட கொவிட் 19 பேரழிவு காரணத்தினால் அந்த பெறுபவர்கள் உடன்படிக்கை மேற்கொள்ள முன்வரவில்லை. மத்திய அரசின் ஏற்பாடுகளை பெற்றுக்கொண்டு தரையை அலங்காரப்படுத்தல் மற்றும் அடுத்த அபிவிருத்தி அலுவல்கள் விரைவாக பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | ஓய்வு வளாகம் மற்றும் கடை அறைகள் சுற்றுலா பிரயாணிகளுக்காக விரைவாக திறக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | கிதுல்கொடே சுற்றுலா வசதிகள் நிலையத்தின் சமையலறை மற்றும் சிற்றுண்டிச்சாலை ரூபா 20,987,306 தொகை செலவிடப்பட்டு 2018 ஜூலை 18 திகதி அளவிலும், கழிவறை முறைமை ரூபா 6,029,215 தொகை செலவிடப்பட்டு 2018 மே 02 திகதி அளவில் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை அவை பயன்படுத்தப்பட்டிருக்காமையால் செலவிடப்பட்ட தொகைக்கு ஏற்றவாறு வருமானம் உழைப்பதற்கு முடியாமல் இருந்தது. | நீண்டதூர பிரயாண பஸ் வண்டிகளுக்காக வசதிகள் வழங்கப்படும் நிலையத்தின் கட்டிடத்தை குத்தகைக்கு வழங்குவதற்காக கூறுவிலைகள் அழைக்கப்பட்ட பின்னர் அதற்கான கூறுவிலைகள் சமர்ப்பித்த வழங்குனர்கள் நாட்டில் நிலவிய கொவிட் 19 பேரழிவு காரமாண உடன்படிக்கை மேற்கொள்வதற்கு முன்வந்திருக்கவில்லை. அதன் காரணமாக உள்நாட்டு சுற்றுலா பிரயாணிகளை இலக்காக கொண்டு இங்கு விவசாயத் திணைக்களத்தின் கீழ் உள்நாட்டு உணவகம் ஒன்று நிறுவுவதற்காக திட்டமிடப்பட்டுள்ளதுடன் அதற்காக மத்திய அரசின் விவசாய அமைச்சுக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. | விரைவாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.4 தலைப்பு – 706 , விவசாய, நீர்ப்பாசன, கால்நடை உற்பத்தி, நன்னீர் மீன்பிடி அலுவல்கள் அமைச்சு

---

(அ) விதை உருளைக் கிழங்கு இறக்குமதி செய்து வினியோகிக்கும் விஷேட முற்பணக் கணக்கு அலுவல்

---

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட முற்பணக் கணக்கில் காட்டப்பட்டுள்ள ரூபா 24,906,660 இற்கான நட்டத்தை ஈடுசெய்வதற்காக ஊவா மாகாண சபை நிதி விதி 511 இன் படி உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | நிதி விதி 511 இன் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2003 ஆம் ஆண்டின் போது விவசாயிகள் இடையே வினியோகித்திருந்த இறக்குமதி செய்யப்பட்ட விதை உருளைக் கிழங்குகள் தொடர்பாக மீளாய்வாண்டு ஆரம்பத்தில் பெற வேண்டியிருந்த கடன் மீதி ரூபா 10,509,070 தொகை காணப்பட்டதுடன் அவற்றில் ஆண்டின் போது ரூபா 197,151 தொகை மாத்திரம் அறவீடு செய்யப்பட்டிருந்தது. அதன்படி கடன் அறவீடுகளின் முன்னேற்றம் 1.8 சதவீதம் ஆன மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன், கடன் அடிப்படையில் விதைகள் வழங்கி 17 வருடங்கள் கடந்திருந்த போதிலும் மேலும் ரூபா 10,311,919 தொகை அறவீடு செய்யப்பட வேண்டியிருந்தது. | சில கடன்பட்டோர் இறத்தல், ஓய்வுபெறல் மற்றும் பிரதேசத்தை விட்டு சென்றிருத்தல் காரணமாக அறவீடு செய்தல் பலவீன மட்டத்தில் காணப்படுகின்றது என மற்றும் அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | விரைவாக கடன் அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (iii) | இறக்குமதி செய்யப்பட்ட விதை உருளைக் கிழங்குகள் அழுகியிருந்த காரணத்தினால் விதை உருளைக் கிழங்கு இறக்குமதி செய்த கம்பனியில் இருந்து ரூபா 4,893,741 தொகையினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கவேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதி வரை அறவீடு செய்திருக்கவில்லை. | ‘‘ஈரம் அழுகுதல்’’ நோய் காரணமாக சுங்கத்திலேயே நிராகரிக்கப்பட்டு இறக்குமதி செய்யப்பட்ட விதை உருளைக் கிழங்கு வழங்கியிருந்த கம்பனியில் இருந்து அறவிடப்பட வேண்டியிருந்த நட்டமாகிய ரூபா 4,893,741 இற்கான தொகை விரைவாக தீர்க்கும் படி அறிவிக்கப்பட்டு குறிப்பிட்ட கம்பனிக்கு அடிக்கடி கடிதங்கள் அனுப்பப்பட்டன. எனினும் அவற்றிற்கு சிறந்த பதில் ஒன்ற அந்தக் கம்பனி அனுப்பியிருக்காமையால் இந்த சிக்கலை சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டது. | முறையான உடன்படிக்கைகள் மேற்கொண்ட பின்னர் இறக்குமதி செய்வதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்படாமை மற்றும் விரைவாக சர்வதேச நடுத்தீர்ப்பர் இடம் செல்லாமை ஆகிய காரணங்களினால் பொறுப்புக்களை நழுவவிட்ட உத்தியோகத்தர்களிடம் அறவீடு செய்யப்பட வேண்டும். |

### 1.5.5 தலைப்பு - 709 பிரதி பிரதான செயலாளர்(ஆளணி மற்றும் பயிற்ச்சி) அலுவலகம்

**பதவியணி நிர்வாகம்**

**(அ) அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான ஆளணி**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உன்னவாறு ஊவா மாகாண சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான ஆளணி தொடர்பான நிலைமை கீழே காண்பிக்கப்படுகிறது.

**(i) மாகாண சபை அமைச்சு/ திணைக்களம் மற்றும் அலுவலகம் (பாடசாலை பதவியணி தவிர)**

| ஊழியர் வகை | | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளவாறான | வெற்றிடம் | மிகை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 1453 | 1015 | 438 | - |
| (ii) | மூன்றாம் மட்டம் | 310 | 183 | 127 | - |
| (iii) | இரண்டாம் மட்டம் | 7848 | 6583 | 1265 | - |
| (iv) | ஆரம்ப மட்டம் | 5887 | 5075 | 812 | - |
| (v) | ஏனைய(அமைய/தற்காலிக ஒப்பந்த அடிப்படை) | - | 720 | - | 720 |
| (vi) | இரண்டாம் மட்டம் (அங்கீகரிக்கப்படாத அபிவிருத்தி உத்தியோகத்தர்) | - | 19 | - | 19 |
| | மொத்தம் | 15498 | 13595 | 2642 | 739 |

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தி யோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஊவா மாகாண சபையின் அங்கீகரிக்ப்பட்ட ஆளணிக்கு மேலதிகமாக ஊழியர்கள் 739 பேர் பல்வேறு பதவிகளுக்காக முறைசாரா விதமாக ஆள் சேரக்கப்பட்டிருந்தது. | இரண்டாம் மட்டத்தின் உத்தியோகத்தர் 19 மீண்டும் பதவியணயில் உற்படுத்துவற்காக எனது இலக்கம் 4/HRM/2(பொது) மற்றும் 2020 ஜுன் 23 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் முகாமைத்துவ சேவை திணைக்களத்தில் இருந்து மீண்டும் விண்ணப்பிக்கப்பட்டது. ஏனை (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) மீது 720 ஊழியர்கள் தொடர்பாக முகாமைத்துவ சேவை திணைக்களத்தினால் கருத்துத் தெரிவித்திருக்கவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது கால ரீதியாக ஆளணியினை திறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(ii) பாடசாலைப் பதவியணி**

| ஊழியர் வகை | | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளவாறான | வெற்றிடம் | மிகை |
|---|---|---|---|---|---|
| (i) | அதிபர்கள் | 1077 | 738 | 339 | - |
| (ii) | ஆசிரியர்கள் | 16384 | 16490 | - | 106 |
| (iii) | உதவிப்பதவியணி | 2464 | 2653 | - | 189 |
| (iv) | ஏனைய(அமைய/தற்காலிக ஒப்பந்த அடிப்படை) | - | 25 | - | 25 |
| (v) | ஆசிரியர்கள் (அங்கீகரிக்கப்படாத) | - | 642 | - | 642 |
| (vi) | உதவிப்பதவியணி (அங்கீகரிக்கப்படாத) | - | 122 | - | 122 |
| | மொத்தம் | 19925 | 20670 | 339 | 1084 |

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஊவா மாகாண சபையின் பாடசாலை பதவியணிக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு மேலதிகமாக உத்தியோகத்தர்கள் 1084 பேர் இணைக்கப்பட்டிருந்தது. | 2017 பதவியணி மீளாய்விற்கு முன்னர் மாகாண கல்வி திணைக்களத்தில் பாடசாலை பதவியணியில் அங்கீகரிக்கப்பட்டிருந்த இந்த பதவிகளின் எண்ணிக்கை, புதிய பதவியினை அங்கீகரிக்கும் போது முகாமைத்துவச் சேவை திணைக்களத்தினை நழுவி இருந்ததென அவதானிக்கப்பட்டதுடன் மீண்டும் அங்கீகாரத்தை பெறுவதற்காக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் வெற்றிடங்களுக்கான ஊழியர்கள் சேர்ப்பதற்கு அல்லது காலரீதியாக பதவியணியை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.6 தலைப்பு – 710 – சுகாதார சேவைகள் திணைக்களம்

**(அ) சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணங்காமை**

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி ரூபா. | இணங்காமை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 இலக்கங் கொண்ட பொது நிருவாகச் சுற்றறிக்கை | 5,700,000 | அனைத்து உத்தியோகத்தர்களினாலும் உள்வருதல் மற்றும் வெளிச்செல்லல் அடையாளப்படுத்துவதற்காக விரலடையாள இயந்திரம் பயன்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், ஊவா மாகாண சுகாதாரத் திணைக்களம் 2017 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த 100 விரலடையாளம் இடும் இயந்திரங்களை குறிப்பிட்ட கருமத்திற்காக 2020 திசெம்பர் 31 திகதி வரை பயன்படுத்தியிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படுவதற்காக அனைத்து சுகாதார நிறுவனங்களிலும் இயந்திரங்கள் பொருத்தப்பட்ட போதிலும் அவற்றில் 37 நிறுவனங்களின் அலுவல்களை உத்தியோகத்தர்கள் மாத்திரம் அதனை பயன்படுத்தி இருந்தனர். விரலடையாள இயந்திரத்தை பயன்படுத்தும் படி பல சந்தர்ப்பங்களில் அந்த நிறுவனங்களுக்கு அறிவுறுத்திய போதிலும் அனைத்து பதவிகளைச் சேர்ந்த பதவியணியினரும் அவற்றை பயன்படுத்தாமையால் தொழிற்சங்கங்கள் காட்டும் எதிர்ப்புகள் மீது ஊவா மாகாணத்தில் ஏனைய வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிறுவனங்கள் இந்த இயந்திரத்தை பயன்படுத்துவதில்லை. | 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 இலக்கங் கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

**(ஆ) முகாமைத்துவத் திறமையின்மைகள்**

| | | |
|---|---|---|
| ஹப்புத்தளை மாவட்ட வைத்தியசாலைக்கு நீர் மாவட்ட வைத்தியசாலைக்கு நீர் பெற்றுக் கொள்ளும் நீருற்றுடன் மிருகக் கழிவுகள் சேர்வதன் காரணத்தினால் குடிப்பதற்கு பொருத்தமற்றதும் பொதுச் சுகாதார பரிசோதகரினால் உறுதிப்படுத்தப்பட்டிருந்தமையால் மற்றும் வரட்சியான காலத்தில் அந்த நீர் ஊற்றுக்கள் வற்றிச் செல்வதன் காரணத்தினால் வைத்தியசாலைக்கு அத்தியவசியமான குடிநீர் வழங்குவதில் முறையான வேலைத் திட்டம் ஒன்று செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | ஹப்புத்தளை பிராந்திய வைத்தியசாலையின் நீர் சிக்கலைத் தீர்ப்பதற்காக 2021 திட்டத்தில் உட்படுத்தப்பட்டுள்ளது. | முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டிய விடயம் ஒன்றாக கணித்து சிக்கலை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.7 தலைப்பு – 711 , கல்வித் திணைக்களம்

(அ) விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2013 ஜுலை 03 திகதி முதல் மூடப்பட்டிருந்த கந்தேபுகுல்பொல ப/தர்மாராம வித்தியாலயத்தின் கட்டிடம் மற்றும் காணி மற்றும் 2014 செப்தெம்பர் 24 திகதி முதல் வெலிமட பிரதேச செயலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு நவம்பர் 18 திகதி வரை எதுவித தேவைக்கும் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | வெலிமட பிரதேச செயலாளர்: இந்தக் காணி மற்றும் கட்டிடம் விதை உருளைக் கிழங்கு உற்பத்தி நிலையம் ஒன்று, களஞ்சியம் ஒன்று மற்றும் ஆய்வுகூடம் ஒன்று நடாத்துவதற்காக ஊவா மாகாண விவசாயத் திணைக்களத்திற்கு உரித்தாக்கும் படி 2020 திசெம்பர் 07 திகதி கோரிக்கை விடுக்கப்பட்டிருந்ததுடன், அதன் படி உரித்தாக்குவதற்குத் தேவையான ஆவணங்கள் எனது பரிந்துரையுடன் ஊவா மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்திற்கு 2020 திசெம்பர் 11 திகதி அனுப்பப்பட்டது. அதன்படி அந்த உரித்தாக்கல் அலுவல்கள் தற்போது நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றது. | இந்த விளைவற்ற சொத்துக்களை விரைவாக ஆக்கபூர்வமான அலுவல்களுக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.8 தலைப்பு – 715 , கால்நடை வளர்ப்பு மற்றும் சுகாதாரத் திணைக்களம்

(அ) பொரலந்த கால்நடை பண்ணையின் வாணிப முற்பணக் கணக்கு அலுவல்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கையில் இருப்பு கணிக்கும் போது கால்நடைகளின் பெறுமதியை பெறுமதி மதிப்பீடு செய்வதற்காக நியமனம் செய்யப்பட்ட குழுவின் அறிக்கையின் படி, எருமைகளின் பாரம் | மீளாய்வாண்டின் போது இருப்புக் கணிப்பில் எருமைகளின் பெறுமதியை ரூபா 100 இனால் குறைவாக பெறுமதி மதிப்பீடு செய்திருந்தமையால் இறுதி இருப்பில் ரூபா 2,847,500 | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 01 கிலோகிராமிற்கு ரூபா 300 வீதம் கணிக்க வேண்டியிருந்த போதிலும் ரூபா 200 வீதம் கணித்திருந்தமையால் 87 எருமைகளின் 28,475 கிலோகிராம் பாரத்திற்காக ரூபா 2,847,500 குறைவாக கணிக்கப்பட்டிருந்தது. அதே போல் மூன்று எருமைகளின் பெறுமதியை கணிக்கீடு செய்யாமையால் இருப்புப் பெறுமதி ரூபா 109,800 தொகையினால் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது. அதன் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கையில் இருப்பு ரூபா 2,957,300 தொகை குறைவாக மற்றும் ஆண்டிற்கான செயற்பாட்டு நட்டம் அதே தொகையினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | தொகையினால் குறைவடைந்திருந்த தவறினை 2021 திசெம்பர் 31 திகதி முடிவடையும் ஆண்டிற்கான வாணிப முற்பணக் கணக்கு தயாரிக்கும் போது தவறினை சரி செய்யும் நாட்குறிப்பு பதிவு ஒன்றின் மூலம் ஆரம்ப இருப்பு மீதியை திருத்தி சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என கருணையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். | |
| (ii) | மீளாய்வாண்டின் போது கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தினால் பண்ணைக்கு வழங்கியிருந்த ரூபா 1,398,360 இற்கான 05 சொத்து விடயங்களின் பெறுமதியை கணக்கீடு செய்யாமையால் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நடைமுறையல்லாத சொத்துக்கள் மற்றும் மூலதனம் ரூபா 1,398,360 தொகைவீதம் குறைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளன. | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கணக்கீடு செய்வதற்கு முடியாமல் போன ரூபா 1,398,360 இற்கான சொத்துக்கள் 2021 திசெம்பர் 31 திகதியில் முடிவடையும் ஆண்டிற்கான வாணிப முற்பணக் கணக்கு தயாரிக்கும் போது மூலதனப்படும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என கருணையுடன் அறிவித்துக் கொள்கின்றேன். | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (iii) | ஊவா மாகாண சபை நிதிவிதி 503.4 இன் படி முற்பணக் கணக்குகள் தொடர்பாக குறிப்பிட்ட எல்லையுள் செயற்பட வேண்டியிருந்த போதிலும் கால்நடைப் பண்ணையின் 2020 வாணிப முற்பணக் கணக்கில் உச்ச வரவு மீதி எல்லை ரூபா 20,000,000 தொகை மற்றும் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நடைமுறைச் சொத்துக்களின் மீதி ரூபா 38,026,314 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 18,026,314 இனால் உச்ச வரவு மீதி எல்லை மிகைத்திருந்தது. | கால்நடைகளின் உயிருடன் கூடிக் குறைவதனால் பெறுமதியினை பெறுமதி மதிப்பீடு செய்தல் செய்முறை ரீதியாக இயலாமல் இருப்பதனால் 2020 எல்லைகளை திருத்தும் போது உச்ச வரவு மீதி திருத்தப்பட்டிருக்கவில்லை எனவும் எதிர்காலத்தில் இந்த எல்லையை திருத்தித் தரும்படி பிரதிப்பிரதான செயலாளருக்கு அறிவிக்கப்பட்டது. | தேவையான சந்தர்ப்பங்களில் எல்லைகளை திருத்திக்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | ஊவா மாகாண சபை நிதிவிதி 509 இன் படி நிலையான சொத்துக்களின் பெறுமானத்தேய்வு கழித்து அதற்குரிய தொகையினை மாகாண திறைசேரியின் "பொது வைப்புக் கணக்கு – பெறுமானத்தேய்வு ஒதுக்க நிதியம்" செலவு வைக்க வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்ட பெறுமதியாகிய ரூபா 4,023,662 தொகை மாகாண திறைசேரிக்கு அனுப்பி அல்லது ஒதுக்கமென கணக்கீடு செய்திருக்கவில்லை. | மீண்டுவரும் செலவுகள் மேற்கொள்வதற்காக போதியளவு தொழிற்படு மூலதனம் ஒன்று பண்ணையில் காணப்பட வேண்டியிருந்தமையால் பெறுமானத் தேய்வுத் தொகையினை ஒதுக்க நிதியத்திற்கு செலவு வைக்கப்படவில்லை. | நிதி விதி 509 இன் படி செயற்பட வேண்டும். |

### 1.5.9 தலைப்பு – 716 , காணி ஆணையாளர் திணைக்களம்

வருமான முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| காணி ஆணையாளர் நாயகத்தினால் வாணிப அடிப்படையில் நீண்ட காலத்திற்காக குத்தகைக்கு வழங்கியிருந்த காணிகளுக்காக 06 குத்தகையாளர்களிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஊவா மாகாண சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 22,421,720 தொகையினை அறவீடு செய்திருக்கவில்லை. | இந்த நிலுவைக் குத்தகைத் தொகையினை அறவீடு செய்வதற்காக புதிய கோவைகள் தயாரிக்கப்பட்டு குத்தகையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக ஆசோசனை பெற்றுக் கொள்வதற்காக அந்த விபரங்கள் காணி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. | குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.10 தலைப்பு – 717 , நீர்ப்பாசனத் திணைக்களம்

(அ) கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மொனராகலை மாவட்டச் செயலாளரினால் வழங்கியிருந்த நிதி ஏற்பாடுகளின் படி ரூபா 4,916,581 தொகை செலவிடப்பட்டு | இங்கு உடைந்திருந்த குளத்தின் சுவர் செப்பனிடப்பட்டதுடன் வழிப்படலை ஒன்று காணப்படாமையால் கொங்கிரீட் | பூர்வாங்க ஆய்வு ஒன்று மேற்கொண்டு அதன் பெறுபேற்றின் மீது நிர்மாண |

| | | |
|---|---|---|
| சியம்பலாண்டுவ கரம்மட குளத்தின் வழிப்படலை நிர்மாணிக்கும் போது அது குறிப்பிட்ட உயரத்தை விட குறைவான உயரத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்தமையால் குளத்தின் நீர் போதியளவு தங்கியிருக்காமல் காடுகள் வளர்ந்து அந்தச் செலவு விளைவற்ற செலவொன்றாக மாறியிருந்ததுடன் செயற்திட்டப் பிரேரணையின் படி 20 விவசாயக் குடும்பங்கள் மூலம் சுமார் 50 ஏக்கர் வயல் விவசாயம் செய்யும் குறிக்கோளை நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் இருந்தது. | மூலம் வழிப்படலை ஒன்று தயாரிக்கப்பட்டது. குளத்தின் சுவர் மட்டத்தை எடுக்கும் போது அதற்கு உயரத்தில் காணப்பட்ட பாதை தாளாதவாறு உயரத்தினை வரையறுத்து, அதன் படி வழிப்படலையின் உயரமும் தீர்மானிக்கப்பட்டு நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.<br><br>குளம் நிரம்புவதற்காக மழைநீர் மாத்திரம் பயன்படுத்தப்படுவதனால் பொருளாதார பயிர்கள் வளர்த்தல் மிகவும் பொருத்தமானதாகும். தற்போது சோளம், கரும்பு பயிர்செய்யப்படுவதனால் இது விளைவற்ற செலவொன்றல்ல.<br><br>குளத்தினுள் காணப்பட்ட மண் ஏனைய அபிவிருத்தி வேலைகளுக்காக பயன்படுத்தல் மூலம் குளத்தின் கொள்திறனை அதிகரிக்க முடியும் என பிரதேச செயலாளருக்கு அறிவுறுத்தியதுடன் போதியளவு அகலத்தில் வழிப்படலை நிர்மாணிக்கப்பட்டிருந்தமையால் மழையினை ஆய்வுசெய்து பாதை தாழாதவாறு வழிப்படலையை இன்னும் ஒருஅடி உயரம் உயர்த்துவதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். | வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.11 தலைப்பு – 718 , கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களம்

(அ) நெசவுத் தொழில் வாணிப முற்பணக் கணக்கு அலுவல்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 16,013,745 | எதிர்காலத்தில் தாயரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என | நிலையான சொத்துக்கள் |

| | | | |
|---|---|---|---|
| | இற்கான நடைமுறையல்லாத சொத்துக்களின் மீதியை உறுதிப்படுத்துவதற்காக நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் பெறுமதியுடனான அட்டவணைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | கருணையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | பதிவேடொன்று பேணப்பட வேண்டும். |
| (ii) | ஊவா மாகாண சபை நிதி விதி 503.4 படி முற்பணக் கணக்கு அலுவல்கள் தொடர்பாக குறிப்பிட்ட எல்லைகளினுள் செயற்பட வேண்டும். எனினும் மீளாய்வாண்டிற்கான நெசவுத் தொழில் வாணிப முற்பணக் கணக்கு தொடர்பாக உச்ச வரவு மீதி எல்லை ரூபா 63,562,800 தொகை எனினும் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றின் படி நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 76,551,078 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 12,988,278 இனால் உச்ச வரவு மீதி எல்லை மிகைத்திருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது என கருணையுடன் குறித்துக் கொள்கின்றேன். | குறிப்பிட்ட எல்லையுள் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் அவ்வாறு முடியாவிடின் எல்லையை திருத்திக் கொள்ள வேண்டும். |
| (iii) | ஊவா மாகாண சபை நிதி விதி 510.2 இன் படி முற்பணக் கணக்கு அலுவல்களின் மூலம் உருவாக்கப்படும் இலாபம் மாகாண சபை நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்கான ரூபா 4,333,571 இற்கான இலாபம் மாகாண சபை நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என கருணையுடன் அறிவித்துக் கொள்கின்றேன். | நிதி விதி 510.2 இன் படி செயற்பட வேண்டும். |
| (iv) | 1991 ஆம் ஆண்டு முதல் 2019 ஆண்டு வரை கடனிற்கு விற்பனை செய்யப்பட்ட புடவைகளுக்காக மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 799 அரச நிறுவனங்களை சேர்ந்த உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 3,138,410 தொகையினை அறவீடு செய்திருக்கவில்லை. | விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | விரைவாக கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

(ஆ) மென் பொறியியல் வாணிப முற்பணக் கணக்கு அலுவல்

| | | | |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களில் அடங்கியிருந்த ரூபா 1,634,484 இற்கான நடைமுறையல்லாத சொத்துக்கள் மற்றும் ரூபா 585,115 இற்கான பெற வேண்டிய விற்பனை வருமானத்தை உறுதிப்படுத்துவதற்காக நிலையான சொத்துக்கள் பதிவேடு, பெறுமதியுடனான அட்டவணைகள் மீதிகளை உறுதிப்படுத்தல் மற்றும் காலப்பகுப்பாய்வு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என கருணையுடன் குறிப்பிடுகின்றேன். | நிலையான சொத்துக்கள் பதிவேடுகள் கடன்பட்டோர் தொடர்பான பதிவேடுகள் பேணிச் செல்ல வேண்டும். |
| (ii) | ஊவா மாகாண சபை நிதி விதி 503.4 இன் படி முற்பணக் கணக்கு அலுவல்கள் தொடர்பாக குறிப்பிட்ட எல்லையுள் செயற்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டில் மென்பொறியில் வாணிப முற்பணக் கணக்குகள் தொடர்பாக உச்ச வரவு மீதி எல்லை ரூபா 2,200,000 தொகை எனினும் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றின் படி நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 2,606,726 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 406,726 இனால் உச்ச வரவு மீதி எல்லை மிகைத்திருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு குறித்துக்கொண்டேன் என கருணையுடன் குறிப்பிடுகின்றேன். | நிதி விதி 503.4 இன் படி செயற்பட வேண்டும். |
| (iii) | மீளாய்வாண்டிற்கான உச்ச பொறுப்புக்களின் எல்லை ரூபா 50,000 தொகை எனினும் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றின் படி பொறுப்புக்கள் ரூபா 545,400 தொகையாகக் காணப்பட்டமையால் ரூபா 495,400 தொகையினால் உச்ச பொறுப்புக்களின் எல்லை மிகைத்திருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு குறித்துக்கொண்டேன் என கருணையுடன் குறிப்பிடுகின்றேன். | நிதி விதி 503.4 இன் படி செயற்பட வேண்டும். |

### 1.5.12 தலைப்பு – 721 – ஆயுர்வேதத் திணைக்களம்

**(அ) சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணக்கமின்மை**

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி ரூபா. | இணங்காமை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 இலக்கங் கொண்ட பொது நிருவாகச் சுற்றறிக்கை | 848,891 | அனைத்து உத்தியோகத்தர்களினாலும் உள்வருதல் வெளிச்செல்லல் அடையாளப்படுத்துவதற்காக விரலடையாள இயந்திரம் பயன்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் ஊவா மாகாண ஆயுர்வேத திணைக்களத்தினால் 2017 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த 31 விரலடையாள இயந்திரங்கள் குறிப்பிட்ட கருமத்திற்காக பயன்படுத்தப்படாமல் 2020 திசெம்பர் 31 திகதி வரை பயன்படுத்தியிருக்கவில்லை. | ஆயுர்வேத ஆணையாளர் அலுவலகம் மற்றும் தியதலாவ ஆயுர்வேத வைத்தியசாலை ஊழியர்கள் தவிர 31 நிறுவனங்களின் சுகாதார ஊழியர்கள் தொழில் காரணமாக விரலடையாள இயந்திரத்தை பயன்படுத்தவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

### 1.5.13 தலைப்பு – 722 – நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைத் திணைக்களம்

(அ) சுற்றாடல் சார் மற்றும் சமூக பொறுப்புக்களை நிறைவேற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஊவா மாகாண சுற்றாடல் மற்றும் நன்னடத்தைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைத் திணைக்களத்திற்கு சொந்தமான பிபில, செவன சிறுவர் அபிவிருத்தி நிலைய வளவில் இருந்து விடுவிக்கப்படும் கழிவு நீர் சுத்திகரிக்கப்படாமல் பிரதான பாதையின் வடிகால் ஊடாக வெளி | தற்போது கழிவுநீர் முறைப் பிரகாரம் அனுப்புவதற்கு தேவையான நீர் உறிஞ்சக் கூடிய கிடங்கு ஒன்று தயாரிப்பதற்கு தேவையான மதிப்பீடு ஒன்றினை வழங்குமாறு மாகாண கட்டிடப் பணிப்பாளர் மற்றும் பிபில பிரதேச | கழிவுநீரை வெளியேற்றுவதற்காக முறையான செய்முறை ஒன்று நிறுவப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| சுற்றாடலுக்கு அனுப்பப்படுகின்றது. இந்தச் செயல் சட்டவிரோதமானது என சுட்டிக் காட்டி யல்கும்புர பொதுச் சுகாதார பரிசோதகரினால் 2020 ஜுலை 08 திகதி, 1939 இன் 61 ஆம் இலக்க மற்றும் 1946 இன் 57 ஆம் இலக்க ஊறுவிளைவிக்கும் செயற்பாடுகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டிருந்ததுடன், அந்த அறிவித்தல் தினத்தில் இருந்து 60 நாட்களுக்குள் முறையாக உறிஞ்சிக் கொள்ளக் கூடிய கிடங்கு ஒன்றிற்கு அசுத்தநீர் அனுப்பப்பட வேண்டும் என சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. எனினும் 2021 மார்ச் மாதம் வரை இது தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அதன் படி உரிய அளவை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | |

### 1.5.14 தலைப்பு – 726 – பிரதி பிரதான செயலாளர் (பொறியியல் சேவை) அலுவலகம்

(அ) முறைசாராக் கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியத்தை பயன்படுத்தி செயற்படுத்தப்படும் ‘‘சுகாதார முறைமையை முன்னேற்றும் செயற்திட்டம்’’ முதல் சுற்றில் 10 செயற்திட்டங்களுக்காக ஊவா மாகாண கட்டிடத் திணைக்களத்திற்கு கிடைத்திருந்த ரூபா 3,544,205 இற்கான பொறியியல் சார் உள்ளீடுகளுக்காக உசாத்துணைச் சேவை கட்டணம் ஊவா மாகாண சபை நிதி விதி 2.1 இன் படி மாகாண சபை நிதியத்திற்கு செலவு வைத்திருக்கவில்லை. அதே போல் அந்த பணத்தில் இருந்து அரச செலவு முகாமைத்துவம் மற்றும் நிதி ஒழுக்கநெறியை பேணிச் செல்லல் தொடர்பாக 2019 திசெம்பர் 04 திகதிய 07/2019 இலக்கங் கொண்ட பாதீட்டுச் சுற்றறிக்கையின் ஆலோசனைகளுக்கு முரணாக மாகாண கட்டிடத் | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | ஊவா மாகாண நிதி விதி 2.1 இன் படி செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| திணைக்களத்தினால் ரூபா 2,862,340 தொகை பயன்படுத்தி ரூபா 2,290,750 இற்கான கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் ரூபா 571,590 இற்கான அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஆ) ஊவா மாகாண இயந்திர பணிப்பாளர் அலுவலகத்திற்கான முற்பணக் கணக்கு அலுவல் | | |
| 2008 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரை மாகாண சபைக்கு சொந்தமான நிறுவனங்களில் இருந்து அறவீடு செய்யப்பட வேண்டியிருந்த கூட்டுத்தொகை ரூபா 13,307,238 தொகை அறவீடு செய்யாமல் திரண்ட நிதியத்திற்கு சீராக்கல் செய்யப்பட்டிருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | ஊவா மாகாண நிதி விதி 113.5 இன் படி செயற்பட வேண்டும். |

**1.5.15 தலைப்பு – 731 – வீதி அபிவிருத்தித் திணைக்களம்**

(அ) ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| காலநிலையின் பாதகமான தாக்கத்தை குறைக்கும் செயற்திட்டத்தின் கீழ் உடன்படிக்கைப் பெறுமதி ரூபா 58,815,876 தொகைக்காக 2.4 கிலோமீற்றர் நீளமான செல்லக் கதிர்காமம் - கிரிவெஹர பாதையை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருந்தது.<br>செயற்திட்டத்தின் நிர்மாண வேலைகள் தொடர்பாக கணிய பட்டியின் விடய இலக்கம் 1.6 இன் படி பாதைக்கு 150 மில்லிமீற்றர் கனத்தில் கொங்கிரீட் போடப்பட வேண்டியிருந்த போதிலும், பாதை ஆரம்பிக்கும் இடத்தில் இருந்து 300 மீற்றர் தூரத்திற்கு போடப்பட்டிருந்த கொங்கிரீட் படுகையின் கனம் 120 மில்லிமீற்றராக காணப்பட்டது. அதே போல் கனியப் பட்டியில் விடய இலக்கம் 1.7 இன் படி நீளப் பக்கமாகவும் குறுக்குப் பக்கமாகவும் 250 மில்லிமீற்றர் | கணியப் பட்டியில் விடய இலக்கம் 1.6 இன் படி பாதைக்கு 150 மில்லிமீற்றர் கனத்தில் கொங்கிரீட் போடப்பட வேண்டியிருந்த போதிலும் ஆய்வுகூட பரிசோதனை மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட உண்மையான அளவையின் படி கொடுப்பனவு செய்வதற்காக அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன் படி மதிப்பீட்டுத் தொகையை விட கொங்கிரீட் 6.15 கனமீற்றர் கழித்து கொடுப்பனவு பரிந்துரைக்கப்பட்டிருந்தது.<br>கணியப்பட்டியின் விடய இலக்கம் 1.7 இன் கீழ் | நியமக் குறியீடுகளை விலகல்களை சரி செய்வதற்கும் தவறுகளை கண்டறிவதற்கும் முடியாமல் போன உத்தியோகத்தர்களுக்கு எதிராக விசாரணை ஒன்று நடத்துதல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

இடைவெளி காணப்படக்கூடிய விதமாக முறுக்கு உருக்குக் கம்பிகள் பரத்துதல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் 10 இடங்களில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது நீளப் பக்கமாக 260 மில்லிமீற்றர் முதல் 280 வரை இடைவெளியிலும் குறுக்கு பக்கமாக 255 மில்லிமீற்றர் முதல் 280 வரை இடைவெளியிலும் முறுக்கு உருக்குக் கம்பி பயன்படுத்தப்பட்டிருந்தது.

வெளிக்கள பரிசோதனையின் போது கண்டறியப்பட்டது கம்பிகளை கட்டும் போது கம்பிகளின் எண்ணிக்கை சரியாக இருந்த போதிலும், உரிய முறையில் கட்டப்பட்டிருக்காமையால் அளவைகள் வித்தியாசப்படும் என்பதாகும். அதன் படி அதற்கான அறிவுரை வழங்கப்பட்டு சரி செய்யப்பட்டது. இதற்கான கொடுப்பனவு செய்யும் போது அரசுக்கு நட்டம் ஒன்று ஏற்பட்டிருக்கவில்லை.

`(ஆ) சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---------------------------------------------------------------

பொது நிருவாக, உள்நாட்டு விவகார மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சில் இருந்து கிடைத்திருந்த ரூபா 956.7 மில்லியன் இற்கான ஏற்பாடுகளை பயன்படுத்தி ஊவா மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தினால் செயற்படுத்தப்பட்டிருந்த கிராமிய பாலங்கள் செயற்திட்டத்தின் நிர்மாண வேலைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது ரூபா 153 மில்லியன் தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த 05 பாலங்கள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பதுளை மாவட்டத்தில் பண்டாரவெல பிரதேச செயலகப் பிரிவில் ரூபா 32.8 மில்லியன் செலவொன்று மேற்கொள்ளப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த 1125 ஆம் இலக்க கல்கந்தவத்த பாலத்தின் நிர்மாண வேலைகள் முறையற்றதாக காணப்பட்டது எனவும் மற்றும் அதனோடு இணையக் கூடிய பாதையின் நிர்மாண வேலை முறைசாராமல் காணப்பட்டமையால் பாலத்தை பயன்படுத்த முடியாமல்

பாலம் நிர்மாணிக்கும் இடத்தில் காணப்பட்ட பௌதீக நிலைமையின் படி பாலத்தை வீதிக்கு பொருத்தமான முறையான உயரத்தில் தயாரிப்பதற்காக ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகள் போதியளவாக காணப்படவில்லை. இந்த பாதையை எதிர்காலத்தில் அபிவிருத்தி செய்யும் போது உரிய சரிவு

வரைபுகள் அல்லது மதிப்பீடுகள் தயாரிப்பதில் வழுக்கள் காணப்படின் அதனோடு தொடர்புடைய உத்தியோகத்தர்கள் தொடர்பாக விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும். தாமதம் இன்றி பாலத்தை பயன்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்க

| | | | |
|---|---|---|---|
| | இருந்தது. | தயாரித்து கொங்கிரீட் பாதை ஒன்றாக தயாரிப்பதன் மூலம் இந்த நிலைமையை தீர்த்துக் கொள்ள முடியும். இந்த செப்பனிடல் பாதை உரித்தான நிறுவனத்தில் இருந்து மேற்கொள்ளப்படல் அத்தியவசியமானது என குறிப்பிடுகின்றேன். | வேண்டும். |
| (ii) | பதுளை மாவட்ட ஹாலிஎல பிரதேச செயலகப் பிரிவில் குறுகுதேகம ரூபா 25.5 மில்லியன் தொகை செலவிடப்பட்டு நிர்மாணித்திருந்த 2243 ஆம் இலக்க குறுகுதேகம பதுவத்த பாலத்திற்கு குறுகுதேகமவில் இருந்து வரக் கூடிய நுழைபாதையை அகலமாக்கி தொடர்புபடுத்தி இருக்காமையால் வாகனப் போக்குவரத்திற்காக பயன்படுத்த முடியாமல் இருந்தது. | குறுகுதேகம நுழைபாதையை இணைக்கும் பாதையில் பாலம் நிர்மாணிக்கும் சந்தர்ப்பத்தில் மண்சரிவு ஏற்பட்டிருந்ததுடன் பிரதேச மக்களின் கோரிக்கையின் படி இந்தப் பாலம் நிர்மாணிக்கப்பட்டது. பாலம் நிர்மாணிக்கும் சந்தர்ப்பத்தில் பாதையின் இரு பக்கத்திலும் போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தப்பட்டது. குறிப்பிட்ட பிரதேச சபை இந்தப் பாதையை அகலமாக்கி தயாரித்துக்கொள்ள வேண்டும். | வரைபுகள் அல்லது மதிப்பீடுகள் தயாரித்து வழுக்கள் காணப்பட்டால் அதனோடு தொடர்புடைய உத்தியோகத்தர்கள் தொடர்பாக விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும். தாமதம் இன்றி பாலத்தை பயன்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | பதுளை மாவட்டத்தில் எல்ல பிரதேச செயலகப் பிரிவின் பல்லேகெடுவ நாவலகம கிராமத்தில் ரூபா 33.4 மில்லியன் தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த 1843 ஆம் இலக்கம் கொண்ட உடுதுரே பிடபொல பாலத்தின் வலது பகுதியில் பாதை செப்பனிடப்பட்டிருக்காமையால் வாகனப் போக்குவரத்துக்காக பயன்படுத்த முடியாமல் இருந்தது. | பாலத்தின் இடது பக்கத்தின் மூலையில் பாதை அமைந்துள்ளதுடன் எங்களால் 16 மீற்றர் நீளத்திற்கு பாதை நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் இன்னும் 40 மீற்றர் நீளத்திற்கு பாதை செப்பனிடப்பட வேண்டியிருந்தது. அதன் படி பாதைக்கு பாலம் தொடர்புபடுத்தப்பட்டிருந்தது.<br><br>வாகனங்களுக்காக நுழைவு வசதிகள் ஏற்படுத்துவதற்கு முடியாமல் உள்ளது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. புாலத்தை நிர்மாணித்து உரிய பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், பாலத்தின் உச்ச | வரைபுகள் அல்லது மதிப்பீடுகள் வழுக்கள் காணப்பட்டால் அதனோடு தொடர்புடைய உத்தியோகத்தர்கள் தொடர்பாக விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும். தாமதம் இன்றி பாலத்தை பயன்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும்.<br><br>பாலத்தை நிர்மாணிக்க முன்னர் பாதையை அபிவிருத்தி செய்து பாலத்தை பயன்படுத்தும் படி உரிய பிரதேச |

| | | | |
|---|---|---|---|
| | | பயன்பாட்டை பெற வேண்டுமெனின் பிரதேச சபையினால் 40 மீற்றர் தூரத்திற்கு செப்பனிட வேண்டியிருந்தது. | சபையிடம் இணக்கப்பாடு ஒன்றினை பெற்றுக் கொள்ள வேண்டும். |
| (iv) | பதுளை மாவட்டத்தின் எல்ல பிரதேச செயலகப் பிரிவில் கும்பல்வெவ கிராமத்தில் ரூபா 33.2 மில்லியன் தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த 1130 ஆம் இலக்க ஹெட்டிபொலவத்த பாலத்தின் இடது பக்கத்தை பதுளை - பண்டாரவெல பிரதான பாதையுடன் தொடர்புபடுத்துவதற்காக வலது பக்கத்தின் பாதை ஒன்று காணப்படாத தேயிலை தோட்டம் ஒன்றிற்கு தொடர்புபடுத்தப்பட்டு, வாகனப் போக்குவரத்துக்கு பயன்படுத்துவதற்குரிய சந்தர்ப்பம் இல்லாத வகையில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. | வாகனப் போக்குவரத்துக்கு பொருத்தமான பாதை ஒன்றினை பாலத்துடன் தொடர்புபடுத்துவதற்காக சந்தர்ப்பம் காணப்படாத இடம் ஒன்றில் இந்த பாலம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது என்பது சரியானது அல்ல. இந்த ஒற்றை அடிப்பாலம் ஒன்று காணப்பட்ட போதிலும் பிரதேச வாசிகளின் கோரிக்கையின் படி இந்த பாலம் நிர்மாணிக்கப்பட்டது.<br><br>பாலத்தின் இடது பக்கத்தின் முடிவில் சுமார் 30 மீற்றர் பகுதி தனியார் காணி ஒன்று ஊடாக பாதையுடன் தொடர்புபடுத்த வேண்டியிருந்தமையால் தொடர்நடவடிக்கை மேற்கொள்வதற்காக பிரதேச சபைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனால் இது விளைவற்ற செலவொன்றல்ல. | வரைபுகள் அல்லது மதிப்பீடுகள் தயாரிப்பதில் வழுக்கள் காணப்பட்டால் அதனோடு தொடர்புடைய உத்தியோகத்தர்கள் தொடர்பாக விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும். தாமதம் இன்றி பாலத்தை பயன்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (v) | பதுளை மாவட்டத்தில் எல்ல பிரதேச செயலகப் பிரிவில் யஹலஅராவ கிராமத்தில் ரூபா 28.2 மில்லியன் தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த 1844 ஆம் இலக்க கல்தென்னஹேன வெலிஅராவ பாலத்தின் வலது பக்கத்தில் வயலொன்றுடன் தொடர்புபட்டிருத்தல் அதன் காரணமாக பாலத்திற்கு முறையான நுழைபாதை ஒன்று தொடர்புபடுத்தப்பட்டிருக்காமையால் செலவிடப்பட்டிருந்த தொகை சிக்கனமற்ற செலவொன்றாகியிருந்தது. | கணக்காய்வு அவதானிப்பு உண்மையானது. இந்தப் பாலத்தின் வலது பக்க பாதையுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ள பகுதியாக காணப்பட்டதுடன் அது நாவலகம புரான ரஜமஹா விஹார மற்றும் ராவணஎல்ல புரான ரஜமஹா விஹாரைக்கு சொந்தமான வயல் காணியாகும். | வரைபுகளில் அல்லது மதிப்பீடு தயாரித்தல் வழுக்கள் காணப்பட்டால் அதனோடு தொடர்புடைய உத்தியோகத்தர்கள் தொடர்பாக விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும். தாமதம் இன்றி பாலத்தை பயன்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.16 தலைப்பு – 736 – பிரதி பிரதான செயலாளர் (நிதி முகாமைத்துவம்) அலுவலகம்

(அ) சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணக்கமின்மை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி ரூபா. | இணக்கமின்மை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| 2019 திசெம்பர் 04 ஆந் திகதிய 07/2019 இலக்கங் கொண்ட பாதீட்டுச் சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தி | 50,389,479 | மீளாய்வாண்டு அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்படக் கூடாது என ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும், தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு இருந்தது. | இந்த சுற்றறிக்கை 2019 ஆண்டிற்கான பாதீட்டுடன் தொடர்புடையது. இந்த செலவு எல்லா நிறுவனங்களினதும் நிறுவன ரீதியான அலுவல்களை பேணிச் செல்வதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த சுற்றறிக்கை மூலம் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது புதிய வேலைகள் ஆரம்பிக்க கூடாது எனவும் அதன் கருத்து புதிய இனங்காணல் மற்றும் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்படக் கூடாது என்பதாகும். | 2019 திசெம்பர் 31 திகதிய 09/2019 இலக்கங் கொண்ட பாதீட்டுச் சுற்றறிக்கையின் 5.3 இன் மூலம் 07/2019 இலக்கங் கொண்ட சுற்றறிக்கை ஏற்பாடுகள் தொடர்ந்தும் செல்லுபடியாக்கப்பட் டிருப்பதனால் அந்த ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

(அ) நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி 2020 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான மாகாண சபை நிதியத்தின் செயற்பாடுகளின் நிதி விளைவு ரூபா 1,813,542,623 இற்கான பற்றாக்குறை ஒன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 3,230,237,968 தொகையாக இருந்தது.

(ஆ) வருமான மற்றும் செலவு முரண்கள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி மீளாய்வாண்டின் மற்றும் முன்னைய ஆண்டின் வருமானம் மற்றும் செலவு தொடர்பான பொழிப்பொன்று கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 2020 | | | 2019 | | |
| | பாதீட்டு | உள்ளவாறான | முரண் | பாதீட்டு | உள்ளவாறான | முரண் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **மாகாண சபை விடயங்களுக்குரிய வருமானம்** | | | | | | |
| வரி வருமானம் | 1,708,220,000 | 1,531,152,211 | (177,067,789) | 4,877,230,000 | 3,199,744,392 | (1,677,485,608) |
| வரியல்லாத வருமானம் | 579,780,000 | 500,893,829 | (78,886,171) | 477,705,000 | 477,577,071 | (127,929) |
| அரசாங்க மானியம் | 25,476,441,742 | 25,476,441,742 | - | 23,138,000,000 | 21,249,500,000 | (1,888,500,000) |
| கூட்டுத்தொகை | 27,764,441,742 | 27,508,487,782 | (255,953,960) | 28,492,935,000 | 24,926,821,463 | (3,566,113,537) |
| **செலவுகள்** | | | | | | |
| **மீண்டுவரும் செலவுகள்** | | | | | | |
| ஆளுக்குரிய சம்பளங்கள் வேதனங்கள் | 19,254,178,223 | 20,843,181,286 | (1,589,003,063) | 19,248,388,223 | 19,129,812,766 | 118,575,457 |
| ஏனையவைகள் | 4,480,933,777 | 4,166,992,029 | 313,941,748 | 4,480,933,777 | 5,036,621,893 | (555,688,116) |
| மீண்டுவரும் உப கூட்டுத்தொகை | 23,735,112,000 | 25,010,173,315 | (1,275,061,315) | 23,729,322,000 | 24,166,434,659 | (437,112,659) |
| அரச முதலீடுகள் | 1,942,498,447 | 657,555,271 | 1,284,943,176 | 4,472,728,157 | 967,863,593 | 3,504,864,564 |
| கூட்டுத்தொகை | 25,677,610,447 | 25,667,728,586 | (9,881,861) | 28,202,050,157 | 25,134,298,252 | 3,067,751,905 |

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| (i) | ஆண்டிற்கான மொத்தச் செலவு ஆகிய ரூபா 25,667,728,586 தொகையில் மீண்டுவரும் அலுவல்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் ரூபா 25,010,173,315 தொகையாக இருந்ததுடன் ரூபா 657,555,271 தொகை அதாவது மொத்தச் செலவுகளில் சுமார் 3 சதவீதம் மாகாண சபை மாகாண அபிவிருத்தி அலுவல்களுக்காக செலவிடப்பட்டிருந்தது. | கருத்துத் தெரிவிக்கவில்லை. | மாகாண அபிவிருத்தி அலுவல்களுக்காக கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | செலவு விடய இலக்கம் 2401 பதவியணி பயிற்சி வழங்கள் மூலதன செலவு விடயத்திற்காக தேறிய ஏற்பாடுகள் ரூபா 42,711,718 தொகை காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 26,277,541 தொகை அல்லது தேறிய ஏற்பாடுகளில் 62 சதவீதம் பயன்படுத்தப்படாம் சேமிக்கப்பட்டிருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | பெற்றுக்கொண்ட மொத்த ஏற்பாடுகளும் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (iii) | 2013 ஒக்தோபர் 07 திகதிய 21/2013 இலக்கங் கொண்ட 2016 ஜுலை 01 திகதிய 03/2016(1) இலக்கங் கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கையின் படி மேலதிக நேரம் மற்றும் விடுமுறை நாள் சம்பளக் கொடுப்பனவு வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கப்படுகின்ற ஏற்பாட்டு எல்லைக்குள் முகாமைப்படுத்தப்பட வேண்டும். இவ்வாறு மேலதிக நேரம் மற்றும் விடுமுறை நாள் சம்பளத்திற்காக வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 1,709,493,500 இற்கான ஏற்பாட்டுக்கு மேலதிகமாக ரூபா 204,637,585 இற்கான மேலதிக ஏற்பாடுகள் ஒதுக்கி அவற்றில் ரூபா 1,913,073,657 தொகை செலவிடப்பட்டிருந்தது. அதே போல் அவற்றில் ரூபா 365,300 இற்கான ஏற்பாடுகள் நிதி விதி 66 இன் கீழ் வேறு செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்ததுடன் இலக்கம் 1002 மேலதிக நேரம் மற்றும் விடுமுறை நாள் சம்பள செலவு விடயத்திற்காக வருட இறுதியில் ஏற்பாட்டு எல்லையை மிகைத்து ரூபா 172,988,482 இற்கான பொறுப்பொன்றிற்காக கடப்பாடு ஏற்படுத்தியிருந்தது. | மாகாண சபைக்கு ஆரம்ப சந்தர்ப்பத்தில் ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளை கவனத்தில் எடுத்து வருடாந்த நிதிக்கூற்றுக்களில் நிதிக் ஒதுக்குதல் மேற்கொள்ளப்பட்ட போதிலும் உண்மையான தேவைப்பாடு அதனை விட கூடிய பெறுமதி ஒன்றினை எடுக்கின்றது. அத்தியவசிய சுகாதார சேவை ஒன்றினை ஆர்ப்பாட்டங்கள் இன்றி நடாத்திச் செல்வதற்காக மேலதிக ஏற்பாடுகள் ஒதுக்குதல் மேற்கொள்ளப்பட வேண்டும். ஏற்பாட்டு எல்லையை மிகைத்துள்ள பொறுப்புக்களில் சுமார் 95 சதவீதம் சுகாதாரத் திணைக்களம் போன்ற அத்தியவசிய தேவைகளை நடாத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் ஆகும். அந்த கடப்பாடுகள் நிதி விதி 94.2 இன் கீழ் ஏற்படுத்தப்பட்டதாகும். | அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாட்டு எல்லையுள் செயற்பட வேண்டியிருந்ததுடன் மேலதிக ஏற்பாடுகள் ஒதுக்குவதற்காக நிதி விதி 66 இன் கீழ் மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டு மூலம் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட வேண்டும். |
| (iv) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மாகாண சபையின் மொத்தப் பொறுப்புக்கள் ரூபா 324,323,594 தொகையாக காணப்பட்டதுடன் மாகாண சபை நிதி விதி 94.1 இற்கு இணங்காமல் மீண்டுவரும் செலவு விடயங்கள் 09 | மாகாண சபைக்கு ஆரம்ப சந்தர்ப்பத்தில் ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளை கவனத்தில் எடுத்து வருடாந்த நிதிக்கூற்றுக்களில் நிதிக் ஒதுக்குதல் மேற்கொள்ளப்பட்ட போதிலும் உண்மையான | முக்கியத்துவத்தை இனங்கண்டு சிறந்த திட்டமிடலின் மூலம் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இல் மற்றும் மூலதனச் செலவு விடயங்கள் 02 இல் வருடாந்த ஏற்பாட்டு எல்லையை மிகைத்து ரூபா 252,029,445 இற்கான பொறுப்புக்களுக்காக கடப்பாடுகளை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. | தேவைப்பாடு அதனை விட கூடிய பெறுமதியைக் கொண்டிருந்தது. அத்தியவசியமான சுகாதார சேவை ஒன்றின் ஆர்ப்பாட்டங்கள் இன்றி நடாத்திச் செல்வதற்காக மேலதிக ஏற்பாடுகள் ஒதுக்குதல் மேற்கொள்ளப்பட வேண்டும். ஏற்பாட்டு எல்லையை மிகைத்துள்ள பொறுப்புக்களில் சுமார் 95 சதவீதம் சுகாதாரத் திணைக்களம் போன்ற அத்தியவசிய சேவைகளை நடாத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் ஆகும். அந்த கடப்பாடு நிதி விதி 94.2 இன் கீழ் ஏற்படுத்தப்பட்டிருந்தது. | |
| (இ) | முகாமைத்துவத் திறமையின்மை<br>-------------------------------------------------------- | | |
| (i) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஊவா மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களின் படி பிரதேச செயலகம் ஒன்றில் இருந்து மற்றும் மாகாண சபையின் 06 நிறுவனங்களில் இருந்து பெற வேண்டியிருந்த கட்டுநிதி ரூபா 25,340,185 தொகையினை தீர்த்திருக்கவில்லை. | மாகாண திறைசேரிக்கு கட்டுநிதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் படி உரிய நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. | வருட இறுதியில் உள்ளவாறு மீதியாக காணப்படும் கட்டுநிதி மீதியை மாகாண நிதி விதி 366.5.2 பிரகாரம் அடுத்த வருடம் ஜனவரி 10 திகதி அல்லது மாகாண திறைசேரியால் குறிப்பிடப்படும் திகதிக்கு முன்னர் தீர்க்க வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வைப்புச் செய்யப்பட்டு 02 வருடங்களை மிகைத்துள்ள 27 நிறுவனங்களுக்குரிய வைப்பு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 104,551,191 தொகை நிதிப் பிரமாணக் கோவையின் நி.பி.571 இன் பிரகாரம் ஆதனவழிப்பு செய்திருக்கவில்லை. | நி.பி.571 இன் பிரகாரம் தேவையான ஆதனவழிப்பு அலுவல்கள் மேற்கொள்ளும் படி நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டதுடன் அதன்படி எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. | காலங் கடந்த வைப்புக்கள் தொடர்பாக நி.பி.571 இன் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (iii) | ஊவா மாகாண சபையின் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்கள் 29 இல் இருந்து இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள, இறந்துள்ள, ஓய்வு பெற்றுள்ள, வேலை | இந்த கடன் மீதிகளை செலுத்துவதற்கு மற்றும் தீர்ப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தீர்க்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இடைநிறுத்தப்பட்டுள்ள மற்றும் சேவையை விட்டுச் சென்றுள்ள உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 85,217,140 இற்கான சம்பளக் கடன் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (iv) | ஊவா மாகாண சபையின் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் உட்பட 18 பல்வேறு நிறுவனங்களுக்கு பல்வேறு நிறுவங்களில் இருந்து இடமாற்றம் பெற்று வந்திருந்த உத்தியோகத்தர்களிடம் ரூபா 70,027,091 தொகைக்கான கடன் மீதி தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | கடன் மீதியை செலுத்துவதற்கு மற்றும் தீர்ப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | தாபனக் கோவையின் XXIV அத்தியாயம், ஊவா மாகாண நிதி விதி 485(4) மற்றும் ஊவா மாகாண பிரதான செயலாளரின் 2004 ஜனவரி 08 திகதிய 2004/01 இலக்கங் கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (v) | 10 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் மாகாண சபையின் நிதிக் கூற்றுக்களில் நடைமுறைச் சொத்துக்கள் என காட்டப்பட்டிருந்த ரூபா 40,566,157 இற்கான அறவிடப்பட வேண்டியிருந்த தொகையை மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரையும் அறவீடு செய்திருக்கவில்லை. | விதை உருளைக் கிழங்கு கணக்கில் உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த மீதிக்காக குறிப்பிட்ட நிறுவனங்களின் தலைவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டு அந்த உத்தியோகத்தர்களிடம் அறவீடு செய்வதற்காக அறிவிக்கப்பட்டுள்ளது. | கடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

# 2020

# 1st Instalment – Part XXXIV

## CONTENTS


| No. | Head | |
|---|---|---|
| 01 | 321 | **Eastern Provincial Council** |

### 1.5.17 தலைப்பு – 737 – பிரதிப் பிரதான செயலாளர் (திட்டமிடல்) அலுவலகம்

### (அ) மாகாண அபிவிருத்தித் திட்டம்

மீளாய்வாண்டிற்கான மாகாண அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் புதிய வேலைகள் மற்றும் தொடர் வேலைகளுக்கான மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 2,236 மில்லியன் இற்கான 1,485 செயற்திட்ட பிரேரணைகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அந்த செயற்திட்ட பிரேரணைகளின் முன்னேற்றம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செயற்திட்ட வேலைகள் பூர்த்தி செய்தல் தொடர்பான விபரங்கள் | புதிய வேலை | தொடர் வேலை | மொத்த வேலைத் திட்டங்கள் |
|---|---|---|---|
| முற்றாக பூர்த்தி செய்யப்பட்டவை | 616 | 799 | 1415 |
| 50 சதவீதத்தை விட கூடுதலாக பூர்த்தி செய்யப்பட்டவை | 32 | 23 | 55 |
| 50 சதவீதத்தை விட குறைவாக பூர்த்தி செய்யப்பட்டவை | 9 | - | 9 |
| ஆரம்பிக்கப்பட்டிருக்காதவை | 5 | 1 | 6 |
| கூட்டுத்தொகை | 662 | 823 | 1,485 |

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | ஆரம்ப உபசரணை சேவையை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் கீழ் செயற்படுத்துவதற்காக ரூபா 93,300,000 இற்காக மதிப்பிடப்பட்டிருந்த 03 கருமங்கள் மீளாய்வாண்டின் போதும் ஆரம்பிக்கப்படாமல் கைவிடப்பட்டிருந்தது. | செயற்திட்டத்திற்காக மதிப்பீட்டுக் கிரயம் முழுமையாக வழங்கப்படாமையால் ஏற்பாடுகள் போதியளவாக காணப்படாமையால் நிர்மாண வேலை ஆரம்பிக்கப்படவில்லை. | செயற்திட்டத்தின் மதிப்பீடுகள் தயாரிப்பதற்கு முன்னர் ஏற்பாடுகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (ii) | ஊவா மாகாண விவசாயத் திணைக்களத்திற்கு சொந்தமான பிபில விவசாயிகள் பயிற்சி நிலையத்தின் மூலம் தேசிய திறன்தொழில் தகைமை (NVQ-5) பாடநெறிகள் ஆரம்பிப்பதற்காக தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக 2017 ஆம் ஆண்டின் போது விவசாயிகளின் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தில் | 2020 ஆம் ஆண்டில் பாடநெறி அலுவல்கள் ஆரம்பிப்பதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும் கொவிட் 19 நிலைமை காரணமாக நிறுவன அலுவல்கள் செயற்படாமல் இருந்தமை மற்றும் ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகள் கிடைக்கப் பெறாமையால் பாடநெறி அலுவல்கள் | எதிர்பார்த்த குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| இருந்து வழங்கியிருந்த ரூபா 10,000,000 இற்கான ஏற்பாடுகளை பயன்படுத்தி 2018 செப்தெம்பர் வரை அபிவிருத்தி அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை எதிர்பார்த்த குறிக்கோளாகிய தேசிய திறன்தொழில் தகைமை (NVQ-5) மட்டத்தின் பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆரம்பிப்பதற்கு முடியாமல் போனது.<br><br>2021 ஆம் ஆண்டின் மாகாண விடய குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியத்தின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்ததுடன் இந்த ஆண்டில் பாடநெறியை ஆரம்பிப்பதற்கு அனைத்து விடயங்களும் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன. | |

### 1.5.18 தலைப்பு – 712 – உள்ளுராட்சித் திணைக்களம்

(அ) நிலுவை வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மற்றும் முன்னைய ஆண்டிற்கான ஊவா மாகாண உள்ளுராட்சி நிறுவனங்களினால் அறவீடு செய்யப்பட வேண்டியிருந்த வீதவரி மற்றும் ஏனைய வருமானங்கள் ரூபா 725,530,590 தொகையினை அறவீடு செய்திருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்காக உள்ளுராட்சி நிறுவனங்கள் செயற்பட்ட போதிலும் கடந்த ஆண்டு மற்றும் இந்த ஆண்டில் கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் கீழ் இந்த அலுவல்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன. மேலும் நிலுவை வருமானம் அறவீடு செய்வது தொடர்பாக அனைத்து உள்ளுராட்சி நிறுவனங்களுக்கும் அறிவுறுத்தப்பட்டது. | நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

(ஆ) வெளியிட்டிருந்த மிகை விதிப்பு சான்றிதழ்களுக்காக அறவீடு செய்யப்பட வேண்டியிருந்த தொகை

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஊவா மாகாண உள்ளுராட்சி நிறுவனங்களின் பதவி வகிப்போருக்கு மற்றும் உத்தியோகத்தர்களுக்கு எதிராக விதிக்கப்பட்டிருந்த மிகை விதிப்பு தொடர்பாக அறவீடு செய்யப்பட வேண்டியிருந்த ரூபா 5,533,839 தொகையினை அறவீடு செய்திருக்கவில்லை. | மிகை விதிப்பு அலுவல்களின் முன்னேற்றம் பின்வருமாறு ஆகும்.<br>வெலிமட பிரதேச சபை: செலுத்தப்பட்டு வருகின்றது.<br>தனமல்வில பிரதேச சபை: மிகை விதிப்பு தொடர்பாக வழக்கொன்று காணப்படுகின்றது.<br>புத்தள பிரதேச சபை: மேன்முறையீட்டை கவனத்தில் எடுத்த பின்னர் ரூபா 120,850 | விதிக்கப்பட்டிருந்த மிகை விதிப்புக்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

செலுத்தும் படி அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் இது வரை செலுத்தியிருக்கவில்லை.
சியம்பலான்டுவ பிரதேச சபை: ரூபா 18,008 தொகை செலுத்த வேண்டியிருந்தது.